DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.118-2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயராகவன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.12.2025

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் வேதாரண்யம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் 2020ம் ஆண்டு வாய்மேடு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.05.2020ந் தேதி நான், ஆய்வாளர், PC 277 வீரபாண்டியன் ஆகியோர் மதியம் 3.00 மணியளவில் ஆயக்காரன்புலம், பாப்புரெட்டி குத்தகை அருகே சென்றபோது அண்ணாதுரை என்பவர் எங்களை கண்டவுடன் பயந்து ஓடினார். ஆய்வாளர் அவரை ஏன் பயந்து ஓடிகிறாய் என்று கூப்பிட்டு விசாரித்தார். அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் லைசன்ஸ் இல்லாமல் ஒரு நாட்டு துப்பாக்கி இருப்பதாக சொன்னார். அதை எனது வீட்டின் பின்புறம் அதை மறைத்து வைப்பதிருப்பதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வீரப்பாண்டியனும் சாட்சியாக கையெழுத்திட்டோம். அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மகசரில் ஆய்வாளர் துப்பாக்கியை கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும், வீரப்பாண்டியனும் கையெழுத்திட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர்

ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த துப்பாக்கியின் நீளம் 130 செ.மீ இருக்கும். அந்த துப்பாக்கியை காட்டினாள் என்னால் அடையாளம் காட்டமுடியும். அதில் இரும்பு இரண்டு பூண்கள் இருந்தது. மரப்பகுதி, இரும்பு பகுதி எவ்வளவு நீளம் என்று சரியாக எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த அண்ணாதுரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி தான் அண்ணாதுரை ஆவார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் என்னை அதே இடத்தில் தான் விசாரித்தார் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் மேற்சொன்ன இடத்தில் காவல் ஆய்வாளரும், நானும், வீரபாண்டியனும் சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடமான அண்ணாதுரையின் வீட்டு அருகில் நிறைய குடியிருப்பு வீடுகள் இருந்தன மற்றும் அதில் மக்களும் குடியிருந்தனர் என்றால் சரிதான். நான் இதற்கு முன் சொன்ன கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த பின்பு மூவரும் காவல் நிலையம் வந்தோம் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் வந்த பின்பு மீண்டும் சம்பவ இடமான அண்ணாதுரை வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சொன்னபடி எதிரியிடம் எந்தவொரு பொருளும் கைப்பற்றபடவில்லை என்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தாயரிக்கப்பட்டது என்றும் அதனால் தான் பொதுமக்கள் யாரையும் சாட்சிக்கு அழைக்காமல் காவல் நிலையத்தில் உள்ள

எங்களை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.118/2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரபாண்டியன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.12.2025

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2020ம் ஆண்டு வாய்மேடு காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். நான், ஆய்வாளர், 105 விஜயராகவன் ஆகியோர் கடந்த 27.05.2020ந் தேதி 3.00 மணியளவில் மதுவிலக்கு சம்பந்தமாக நாங்கள் சென்றோம். அப்போது அண்ணாதுரை அவர்களை சந்தேகமாக இருந்ததால் விசாரித்தோம். அந்த அண்ணாதுரை ஆஜர் எதிரி ஆவார். அவர் முன்னுக்கு பின் முரணாக சொல்லிக்கொண்டிருந்தார் பின்பு ஆய்வாளர் விசாரித்தபோது என்னிடம் நாட்டு துப்பாக்கி இருப்பதாக சொன்னார். அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். தனது வீட்டிற்கு பின் புறம் புதைத்து வைப்பத்திருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து ஒப்படைப்பதாக சொன்னார். அதில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் தன்னுடைய வீட்டின் கொள்ளை புறத்தில் புதைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து துப்பாக்கியை எடுத்துக்கொடுத்தார். அந்த துப்பாக்கியின் நீளம் 130செ.மீ

உள்ளதாகும். அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி துப்பாக்கியை என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் மேற்சொன்ன இடத்தில் காவல் ஆய்வாளரும், நானும், விஜயராகவனும் சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடமான அண்ணாதுரையின் வீட்டு அருகில் நிறைய குடியிருப்பு வீடுகள் இருந்தன மற்றும் அதில் மக்களும் குடியிருந்தனர் என்றால் சரிதான். நான் இதற்கு முன் சொன்ன கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த பின்பு மூவரும் காவல் நிலையம் வந்தோம் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் வந்த பின்பு மீண்டும் சம்பவ இடமான அண்ணாதுரை வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சொன்னபடி எதிரியிடம் எந்தவொரு பொருளும் கைப்பற்றபடவில்லை என்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தாயரிக்கப்பட்டது என்றும் அதனால் தான் பொதுமக்கள் யாரையும் சாட்சிக்கு அழைக்காமல் காவல் நிலையத்தில் உள்ள எங்களை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.